# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS.No.203/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. ஸ்ரீதர் | ஊர் | : | மேலதிருப்பந்துறுத்தி |
| த.பெ. | : | திரு.ராஜன் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 39 | தொழில் | : | விவசாயம் |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ஆம் நாள் **பி.சா. 3 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் நிர்மலா நகல் வீட்டை கடந்த 31.7.2024 இல் அடமானம் வைத்தேன் அந்த அடமான பத்திரம் நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.4** ஆகும். அடமான ரசீது தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.5** ஆகும். வாதி என்னுடைய அனுமதியில்லாமல் தாவா சொத்தை ஒரு தெய்வமலருக்கு என்பவருக்கு ஒத்தி பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார் அந்த ஒத்தி பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.6**ஆகும். அந்த ஒத்தி பத்திரத்திற்கான தொகையை கொடுத்து நான் 2024 ஆம் ஆண்டு மீட்டேன் அந்த அசல் பத்திரம் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.7** ஆகும். நிர்மலா நகல் வீட்டு வரி ரசீது என் பெயரிலுள்ளதை தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.8** ஆகும். அந்த வீட்டிற்கான குடிநீர் கட்டணம் செலுத்தினேன் அந்த ரசீது தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.9** ஆகும். வாதியும் 2ஆம் பிரதிவாதியும் தனபால் என்பவரிடம் வாங்கிய கடனை நான் பணம் கட்டி மீட்டேன் அதற்கான பத்திரம் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.10** ஆகும். வாதியும் 2ஆம் பிரதிவாதியும் வைத்த கடனை நான் திரும்ப செலுத்தி ரசீது வாங்கினேன் அந்த ரசீது தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.11** ஆகும். வாதி 1, 2 பிரதிவாதிகள் ஆகியோர் சேர்ந்து இந்திரா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரம் தாக்கல் செய்கிறேன்.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்டுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.20 17:30:31 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.